Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# Modern Feminism in the Novel *Irayuthirkadu*

**J. Sherafin**, Reg.No.: 22213154021018, Tamil Department, S.T. Hindu College, Nagercoil -02,
Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0002-6275-3270**
**N. Nisha Navis**, Assistant Professor of Tamil, S.T. Hindu College, Nagercoil -02,
Manonmaniam Sundaranar University, Tirunelveli -12, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597**
**DOI: 10.5281/zenodo.14752946**

## Abstract

*Modern Tamil novels portray the lives of contemporary women. Tamil women have gone through many oppressions and live without much worldly knowledge. They have adapted themselves to suit the modern environment. The times when they fought to free themselves from slavery have changed and they have started fighting for the problems of their dependent communities. They are using their work and knowledge along with social media to reclaim the right to life of socially marginalized people from the ruling classes. Times have changed when they used to think of home as the world and today educational institutions have provided opportunities for women to explore the world. Many modern women do not fail to pass on culture and tradition to the next generation. They raise some intellectual questions against the encroachments imposed on them in the name of spirituality and tradition. Women who were enslaved by patriarchy are also helping men who live with wrong principles in today's times. Modern women do not move their lives according to the environment like the women of the previous century but they shape the environment as it suits them. They do not allow any events in their life that affect their normal life and principles. Indira Soundarrajan has revealed such matters in the novel "Iraiyuthirkadu". It will bring a change in Tamil society by bringing it out of the ruling classes and superstitions.*

**Keywords:** Modern Feminism, Women, Indira Soundarrajan, *Iraiyuthirkadu*.

## References

[1] Archana, A. "Puthumai Pithan Sirukathaigalil Mithavatha Penniyam" *Tamil Mozhi Matrum Pannattu Aivithazh.* Volume - 4, Issue -1, Dec. 2024.
[2] Indira Sounder Rajan. *Iraiyuthirkadu.* Vikatan Publication. Chennai - 600002.
[3] Bharathiar. *Bharathiar Kavithaigal*. Kaleshwari Publication, Chennai -600017.
[4] Muthu Chidambaram, S. *Penniya Thotramum Valarchium.* NCBH, Chennai -600028.
[5] Ratinakumar, N, S. "Venugopalin Chengattu Kathaigalil Pen Thannilaikal." *Tamil Mozhi Matrum Ilakiya Pannattu Aivithazh*, Volume - 4, Issue -1, Dec. 2024.
[6] Vasuki Jayaratnam, Dr. *Pennia Suvadugal.* Arivu Publication, Chennai -600014.
[7] Jayasili. *Kaatil Oru Magan Penniya Nokku.* New Century, Chennai -600028.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X


# இறையுதிர்காடு நாவலில் நவீன பெண்ணியம்

**ஜெ. ஷெராபின்**, பதிவுஎண்: 22213154021018, தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் -02,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-6275-3270
**நே. நிஷா நேவிஸ்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் -02,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0001-9409-5597
DOI: 10.5281/zenodo.14752946

**ஆய்வுச்சுருக்கம்**

*தற்கால தமிழ் நாவல்களில் சமகால பெண்களின் வாழ்வியலை காண முடிகிறது. தமிழ் பெண்கள் பல அடக்குமுறைகளைக் கடந்து உலகியல் சார்ந்த பல அறிவு நுட்பங்களோடு வாழ்ந்து வருகின்றனர். நவீன கால சூழலுக்கு ஏற்றார்போல் தங்களை மாற்றிக் கொண்டனர். தங்களை அடிமை வாழ்க்கையிலிருந்து மீட்டுக் கொள்ள போராடிய காலங்கள் மாறி தான் சார்ந்த சமூக மக்களின் பிரச்சனைகளுக்காக போராட ஆரம்பித்து விட்டனர். சமூகத்தினரால் ஒதுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையை அதிகார வர்க்கங்களிடமிருந்து மீட்டுக்கொள்ள தங்கள் வேலைகளையும் அறிவு திறத்தையும் அதோடு சமூக ஊடகங்களையும் மிகத் தெளிவாக பயன்படுத்துகின்றனர். கலாச்சாரம், பாரம்பரியம் இவற்றை அடுத்த தலைமுறைக்குக் கடத்தவும் நவீன கால பெண்கள் பலர் தவறுவதில்லை. ஆன்மீகம் மற்றும் பாரம்பரியம் என்ற பெயரில் தங்கள் மீது திணிக்கப்பட்ட அத்துமீறல்களை எதிர்த்து அறிவுப்பூர்வமான சில கேள்விகளை எழுப்புகின்றனர். வீட்டையே உலகமாக எண்ணி வாழ்ந்த காலங்கள் மாறி இன்று உலகையே வலம் வருமளவு வசதி வாய்ப்புகளை கல்வி நிலையங்கள் பெண்களுக்கு வழங்கிவிட்டன. ஆணாதிக்கத்தில் அடிமைப்பட்டு இருந்த பெண்கள் இன்றைய காலகட்டத்தில் தவறான கொள்கை கோட்பாடுகளுடன் வாழும் ஆண்களை நல்வழிப்படுத்தவும் செய்கின்றனர். நவீன கால பெண்கள் முந்தைய நூற்றாண்டு பெண்களைப் போல் சூழலுக்கு ஏற்ப வாழ்க்கையை நகர்த்தாமல் தங்களுக்கு ஏற்றார் போல் சூழல்களை அமைத்துக் கொள்கின்றனர். தங்கள் இயல்பு வாழ்க்கையும் கொள்கைகளையும் பாதிக்கும் எந்த ஒரு நிகழ்வுகளையும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் அனுமதிப்பதில்லை. இத்தகைய வாழ்வியல் முறை தமிழ் சமூகத்தை அதிகார வர்க்கங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளிலிருந்து வெளிக்கொண்டு வந்து மாற்றத்தை ஏற்படுத்தும் என இந்திரா சௌந்தர்ராஜன் அவர்கள் தன் இறையுதிர்காடு நாவலில் வெளிப்படுத்தியுள்ளார்.*

**குறிப்புச்சொற்கள்:** நவீன பெண்ணியம், பெண்கள், இந்திரா சௌந்தர்ராஜன், *இறையுதிர்க்காடு.*

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

**முன்னுரை**

தமிழ் நாவல்கள் பெண்ணியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து பெண்ணிய சிந்தனைகளுக்கு வலுசேர்த்த காலங்கள் மாற்றம்பெற்று பெண்ணிய கோட்பாடுகளை பிரதிபலிக்கும் கதாபாத்திரங்களை வெளிகாட்ட ஆரம்பித்துவிட்டன. எழுத்தாளர் இந்திரா சௌந்தர்ராஜன் தன்னுடைய இறையுதிர் காடு நாவலில் பாரதி என்ற கதாபாத்திரத்தை நவீன கால பெண்ணியத்தின் பிரதிநிதியாக முன்னிறுத்தியுள்ளார். பெண்ணிய கோட்பாடுகளான தனித்துவம், அதிகாரம், போராட்ட குணம், சமத்துவம் என பல கூறுகளை தன்னகத்தே கொண்ட பாரதி கதாபாத்திரம் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

**பாரதி கண்ட புதுமைப்பெண் 'பாரதி'**

பாரதி கதாபாத்திரம் தான் இறையுதிர் காடு நாவலின் கதாநாயகி. பாரதி ஒரு எம்.பி.யின் மகளாக இருந்தபோதும் தனது வீட்டில் அடங்கி விடாமல் தனக்கென ஒரு வேலை, தனிக்கொள்கை என சமூக அக்கறை கொண்ட பெண்ணாக திகழ்கிறார். தான் சார்ந்த சமூகம் சந்திக்கும் சமூக சிக்கல்கள், சுரண்டல்கள் மற்றும் அதிகார மீறல்கள் இவற்றிற்கு தனது பத்திரிக்கை வேலையின் மூலம் தீர்வு காண முற்படும் ஒரு புதுமைப்பெண் பாரதி. பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக வாழ்ந்த சூழல்கள் மாற்றம் பெற்று அதிகாரம் மிக்க ஆண்கள் தவறு செய்யும் பட்சத்தில் அதனை எதிர்த்து கேள்வி கேட்டு அதற்கான நீதியை நோக்கி பயணம் செய்யும் பெண்களாக பலர் மாற்றம் பெற்று விட்டனர். பாரதியும் அப்படியான எண்ணம் கொண்டவள் என்பதை நாவலில் வரும் சில நிகழ்வுகள் காட்டுகின்றன. பாரதியின் தந்தை அடுத்தவர் நிலத்தை ஆக்கிரமித்து அதில் கல்லூரி கட்டி பணம் சம்பாதிக்க ஆசை கொள்கிறார். இது போன்ற எந்த எண்ணமும் இல்லாதவள் பாரதி. தான் விலை கொடுத்து வாங்கிய பொருள் தனக்கு சொந்தமில்லை என்று அறிந்ததும் பொருளை உரியவரிடம் ஒப்படைக்கும் மனம் கொண்டவளாக காணப்படுகிறாள். பேராசைமிக்க தன் தந்தையின் மேல் கோபம் கொள்கிறாள். தந்தையை இழந்த சிறுமி மீது கருணை கொள்கிறாள். தன் தந்தை திருந்தி வாழ வேண்டும் என்பதே அவளது எண்ணம். அவரை நல்வழிப்படுத்தவும், பாதிக்கப்பட்ட குடும்பத்தின் நல்வாழ்வுக்காகவும் சில முயற்சிகளை மேற்கொள்கிறாள். அக்குடும்பத்திலுள்ள பெண் குழந்தையின் கல்வி மற்றும் எதிர்கால தேவைகளுக்காக பண உதவி செய்ய வேண்டுமென முடிவு செய்கிறாள். இவ்வாறான அறிவு சார்புலமையும் பொதுநல செயல்பாடுகளும் பாரதியை ஒரு புரட்சி பெண்மணியாக காட்டுகிறது.

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை**
**நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்**
**திமிர்ந்த ஞான செருக்கும் இருப்பதால் (மகாகவி பாரதியார் கவிதைகள்)**

என்ற மகாகவி பாரதியின் வரிகள் பாரதி கதாபாத்திரத்தோடு ஒத்து செல்கிறது. பாரதி நல்லெண்ணம் கொண்ட இனியவள். நாவல் முழுவதும் அவள் ஓரிடத்தில்கூட பொய்

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

உரைத்ததாக காணப்படவில்லை. அவள் ஒவ்வொரு கதாபாத்திரங்களையும் கடந்து செல்லும் விதம் அவளது மன உறுதியை காட்டுகிறது. மனிதர்கள் மட்டுமல்ல விஷத்தன்மை கொண்ட பாம்பு கூட கொல்லப்படக்கூடாது என்பது பாரதியின் எண்ணம். வளர்க்கும் செடிகளும் நீரின்றி வாடுவதை அவள் விரும்பவில்லை. கடவுள் நம்பிக்கை இல்லாதவளாக இந்திரா சௌந்தர்ராஜனால் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் மதங்கள் போதிக்கும் எந்த ஒரு கோட்பாட்டையும் மீறாதவளாக காணப்படுகிறாள் பாரதி.

**மனதி லுறுதி வேண்டும்.**

**வாக்கினி லேயினிமை வேண்டும்.**

**நினைவு நல்லது வேண்டும். (மகாகவி பாரதியார் கவிதைகள்)**

மகாகவியின் இவ்வரிகள் மூலம் அவர் விரும்பிய பெண்ணிய கதாபாத்திரமாக பாரதி காணப்படுவது புலனாகிறது.

**ஆடை சுதந்திரம்**

மாநகரத்தில் வாழும் பெண்களின் இயல்பான ஆடை அணிகலன்களை பயன்படுத்துபவளாகவே பாரதி காட்சிப்படுத்தப்படுகிறாள். தனது வேலைக்கு ஏற்றதாகவும், வசதியாகவும் அமையும் சில ஆடைகளையே பாரதி பயன்படுத்துகிறாள். தமிழ் சமூகத்தின் முந்தைய தலைமுறையினர் வரை புடவையை அணிவதற்கு வசதியானதாக உணர்ந்திருந்தாலும் உலகமயமாதலால் வெளிநாட்டு ஆடை அமைப்புகளை இன்றைய தலைமுறையினர் விரும்பி அணியத் தொடங்கிவிட்டனர். இவை சிலவேளைகளில் சீரழிவுகளையும் சில முகச்சுழிவுகளையும் ஏற்படுத்தி செல்கின்றன. புதுமைப்பெண்கள் என்பவர்கள் வெறுமனே இன்றைய கால நாகரிகங்களுக்கு மட்டும் உட்பட்டவர்கள் அல்லர். பாரம்பரிய சமூக சூழல்களோடும் ஒத்து செல்பவர்களே. தமிழ் சமூகத்தில் பெண்கள் புடவை அணியும் பட்சத்தில் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய தன்மைகளைக் கொண்டிருப்பார்கள் என்ற பொதுவான கண்ணோட்டம் காணப்படுகிறது.

இன்றைய கால அவசர உலகில் வெளிநாட்டு கலாச்சாரங்களை பிரதிபலிக்கும் ஆடைகள் ஒரு பெண்ணை துணிச்சல் மிக்கவளாகவும் உலகியல் குறித்த பரந்துபட்ட பார்வை கொண்டவளாகவும் வெளிக்காட்டுகிறது. இருப்பினும் கோவில் திருவிழாக்கள் திருமண விழாக்கள் போன்ற பாரம்பரிய நிகழ்வுகளின் போது தங்கள் கலாச்சாரத்தை மறவாதவர்களாக புடவை அணிந்து கொள்கின்றனர். பாரதி நாவல் முழுவதும் நவீன உடையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் பிற்பகுதியில் ஆன்மீகம் சார்ந்து பழனி மலை நோக்கி பயணம் செய்யும்போது மஞ்சள் நிற புடவை அணிந்த பெண்ணாகவே காட்டப்படுகிறாள். தனது பணி நிமித்தமாக நவீன ஆடைகளை அணிந்திருந்தாலும் தனது பாரம்பரியத்தையும் கலாச்சாரத்தையும் தமிழ் பெண்கள் மறவாதிருக்க வேண்டும் என்பதை இறையுதிர்காடு நாவல் சுட்டிச் செல்கிறது.

**அறிவு சார் கேள்விகள்**

ஆணாதிக்கத்திற்கும் சமூகத்திற்கும் கட்டுப்பட்டு விளங்கிய பெண்கள் தன் மூத்தோர், ஆண்களை எதிர்த்து கேள்வி கேட்கும் உரிமைகளற்று காணப்பட்டனர். வழிவழியாய் கடைபிடிக்கப்பட்ட சில சடங்குகளை தெய்வ வாக்குகளாக பின்பற்றி வந்தனர். இன்றைய கால பெண்கள் கல்வி அறிவினாலும் சமூக அறிவினாலும் திணிக்கப்படும் தனக்கு விருப்பம் இல்லாத ஆன்மீகம் சார்ந்த நம்பிக்கைகள் மீது கேள்விகளை எழுப்புகின்றனர். முடி காணிக்கை கொடுத்தல் என்பது தமிழ் சமூகத்தின் பெரும்பாலான சமயத்தவரால் பின்பற்றப்படும் பக்தி முயற்சிகளில் ஒன்று. இது நாட்டுப்புற பெண்களிடையே மிகவும் அசைக்க முடியாத நம்பிக்கையாக காணப்படுகிறது. ஆனால் நகர்ப்புற பெண்களில் சிலர் இந்நம்பிக்கைகள் தங்கள் இயல்பு வாழ்க்கையில் தாக்கங்களை ஏற்படுத்துவதாக உணர்கின்றனர். இம்முயற்சிகள் தேவையில்லாதது என்றும் கருதுகின்றனர். இந்நாவலிலும் பாரதி ஒரு நவ நாகரீக பெண்ணாக,

**இந்த உலகத்தையே படைச்சதா சொல்லப்படுற கடவுளுக்கு,**
**போயும் போயும் அல்ப தலை முடியையா தருவாங்க? (இந்திரா சௌந்தரராஜன். ப.23)**

என்ற கேள்வியை முன் வைக்கிறாள்.

இறந்தவர்களை வழிபடும் முறை சங்க காலம் முதலே இருந்து வருகிறது. நாட்டுப்புற தெய்வங்களில் பலவும் இறந்துபட்ட மனிதர்களே. நாட்டுப்புறங்களில் இன்றளவும் இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு படையல் அளிப்பதும் வழிபாடுகள் செய்வதும் இருந்து வருகின்றது. மக்களின் வாழ்வியலோடு ஒன்றிவிட்ட இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்க இயலாத ஒன்றாக காணப்படுகிறது. ஆதலால் அறிவியல் நோக்கில் பயணிக்கும் மக்கள் இதுபோன்ற கருத்துக்களின் மீது நம்பிக்கை இல்லாதவர்களாகவும் அதன் மீது கேள்விகளை எழுப்புபவர்களாகவும் காணப்படுகின்றனர். மேற்கூறிய சிந்தனையோடு செயல்படும் பாரதி,

**செத்துட்ட எல்லாரும் இப்படி ஆவியா வந்து பழி வாங்க முடியும்னா கோர்ட், போலீஸ்னு எதுவுமே தேவையில்லண்ணே! (இந்திரா சௌந்தரராஜன். ப.162)**

என்ற கேள்வியை நாவலில் எழுப்புகிறாள். இம்மாதிரியான கேள்விகளெல்லாம் அவளது அறிவுப் புலமையை வெளிப்படுத்துபவைகளாக அமைகின்றன.

**முடிவுரை**

ஆதிகால சமூகம் பெண்களின் கட்டமைப்பில் அமைந்திருந்தாலும் காலப்போக்கில் சில கட்டுப்பாடுகளையும் அடக்குமுறைகளையும் ஆணாதிக்க சமூகம் குறிப்பிட்ட காலகட்டத்திற்கு முன்பு வரை வடிவமைத்திருந்தது. இதனை தங்களது அறிவு நுட்பத்தினாலும் சில போராட்டங்களினாலும் உடைத்தெறிந்தனர் பெண்கள். தங்கள் வாழ்க்கையை சமுதாயம் முன்னேற்றத்திற்காகவும் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்துகின்றனர். காலங்கள் மாறினாலும் தாய்மை, தோழமை என பெண்ணிற்கான உணர்வுகள் மாற்றம் பெறுவதாய் இல்லை.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
483
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

பெண்கள் கல்வி, அறிவு மற்றும் போராட்ட குணம் போன்றவற்றில் சிறப்புற விளங்கும்போது சமூகம் எந்த ஒரு சீரழிவுகளுமின்றி முன்னேற்றம் பெறும்.

**குறிப்புகள்**

[1] அர்ச்சனா, ஆ. "புதுமைப்பித்தன் சிறுகதைகளில் மிதவாத பெண்ணியம்." *தமிழ் மொழி மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்.* தொகுதி-4, இதழ்-1, டிச. 2021.
[2] இந்திரா சௌந்தர்ராஜன். *இறையுதிர் காடு.* விகடன் பிரசுரம், சென்னை- 600002.
[3] பாரதியார். *பாரதியார் கவிதைகள்.* காளீஸ்வரி பதிப்பகம், சென்னை-600017.
[4] முத்துச் சிதம்பரம், ச. *பெண்ணிய தோற்றமும் வளர்ச்சியும்.* நியூ செஞ்சுரி, சென்னை-600028.
[5] ரத்தினகுமார், ந, சு. "வேணுகோபாலின் செங்காட்டுக் கதைகளில் பெண் தன்னிலைகள்." *தமிழ் மொழி மற்றும் பன்னாட்டு ஆய்விதழ்.* தொகுதி-4, இதழ்-1, டிச. 2021.
[6] வாசுகி, Dr. ஜெயரத்தினம். *பெண்ணியச் சுவடுகள்.* அறிவு பதிப்பகம், சென்னை-600014.
[7] ஜெயசீலி. *காட்டில் ஒரு மகன் - பெண்ணிய நோக்கு.* நியூ செஞ்சுரி, சென்னை-600028.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **https://creativecommons. org/licenses/by/4. 0/** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.